குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்

எஸ்.டி.சி. எண். 07 /2020

PW1-முருகேசன் த/பெ. கோவிந்தன்

தேதி- 11.02.2021

பக்க எண்- 1

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

எதிரி உறசியுல்லா மீது சிசிபி போலிசில் புகார் கொடுத்து உறசியுல்லாவை காவல்துறையினர் விசாரித்த விபரம் பற்றி கேள்விப்பட்டேன். அது சமயம் என்னுடைய அலைபேசியின் மூலமாக உறசியுல்லாவை காவல்துறையினர் Track செய்தனரா என்றால் சரியல்ல. போலிசார் உறசியுல்லாவின் அலைபேசி மூலமாக தான் செய்தனர். தனிப்பட்ட முறையில் எனக்கு போலிசாரிடம் செல்வாக்கு உள்ளது என்றால் சரியல்ல. நானும் என் ஆட்களும், எதிரியிடம் பலவந்தமாக பெற்ற காசோலை சம்மந்தமாக எதிரி எங்கள் மீது பலமுறை சட்ட நடவடிக்கைகள் எடுத்ததையும், புகார்கள் கொடுத்ததையும் என் செல்வாக்கை வைத்து இன்று வரை தடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. இவ்வழ்கை தாக்கல் செய்யும் முன்னர் நான் இரண்டு சட்ட அறிவிப்புகள் (வாசாஆ 8, 9 இன் எஸ்டிசி எண். 17/2020) எதிரிக்கு அனுப்பினேன். வேறு திருத்த அறிவிப்புகள் அனுப்பவில்லை. வாசாஆ 8-இல் (பத்தி 10-இல்) 03-10-2018-இல் காசோலை எண். 21- ஐ கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. நான் எதிரிக்கு சார்வு செய்த வாசாஆ 8-ன் நகலிலும் அவ்வாறுதான் கண்டுள்ளது. வாசாஆ 9-இன் எதிரிக்கு நான் சார்வு செய்த நகலில் 5 ம் மற்றும் 8-ஆம் பத்திகளில் 03-10-2018-என்ற தேதி வாசாஆ 9-இல் 03-11-2018 என்று திருத்தப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எஸ்டிசி 17/2020 புகாரில் வழக்கு மூலம் எழுந்த தேதி 03-10-2018- என்று கூறப்பட்டுள்ளது. மேற்படி புகாரிலேயே 06 மற்றும் 09-ஆம் பத்திகளில் 03-11-2018-என்று திருத்தப்பட்டுள்ளது. காசோலை எண். 21-பற்றி எஸ்டிசி எண். 07/2020-லும் தாக்கல் செய்யப்பட்டுள்ள சட்ட அறிவிப்பில் (வாசாஆ 4) 03-10-2018- என்று குறிப்பிட்டுள்ளேன். எதிரிக்கு சார்வு செய்த மேற்படி வாசாஆ 4-இன் நகலிலும் 03-10-2018 என்று குறிப்பிட்டுள்ளேன். மேற்படி வாசாஆ 4-இல் பத்திகள் 5 மற்றும் 6 இல் தேதி 03-10-2018 என்று குறிப்பிட்டுள்ளது. எஸ்டிசி 07/2020 புகாரில் 7-ஆம் பத்தியில் 03-10-2018-என்ற தேதி 03-11-2018-என்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது. நான் எதிரியிடம் காசோலை பெற்றது 03-11-2018 அன்று ஆகும். நான்பலவந்தமாக எதிரியிடம் காசோலையை பெற்றதால்தான் தேதியை குறிப்பிடுவதில் குழப்பம் ஏற்பட்டது என்றாலும் எனவேதான் 03-10-2018-என்றும், 03-11-2018-என்றும் மாறி மாறி குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி திருத்தத்தையும் புகாரில்

எஸ்.டி.சி. எண். 07 /2020

PW1-முருகேசன் த/பெ. கோவிந்தன்
தேதி- 11.02.2021
பக்க எண்- 2
எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

சரியாக செய்யவில்லை என்றால் சரியல்ல. எஸ்டிசி 07/2020-இல் ஒரு பதில் அறிவிப்பும் ஒரு சட்ட அறிவிப்பும் தனித்தனியாக அனுப்பியுள்ளேன். எஸ்டிசி 07/2020-வழக்கில் காசோலை 21-பற்றி அனுப்பிய பதிலறிவிப்பை தாக்கல் செய்யவில்லை. 31-10-2018-அன்று எதிரியால் காசோலை தொகையை ஏற்பாடு செய்து கொடுக்கமுடியவில்லை என்று என் பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள நிலையில் அன்றிலிருந்து 3 நாட்கள் கழித்து எதிரி திரும்பவும் காசோலைகள் கொடுத்ததாக நான் கூறுவது ஏற்றுக்கொள்ளதக்கல்ல என்றால் சரியல்ல. தமிழக முதல்வருக்கு இவ்வழக்கு காசோலைகள் சம்மந்தமாக நானும், இன்னும் சிலரும் கொடுத்த புகாரில் காணப்படும் தொகைக்கும் இவ்வழக்கின் புகாரிலும், எதிரியிடம் இருந்து எனக்கு வரவேண்டிய தொகைகளை வேறு வேறாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. பொதுவாக காசோலை வழக்கு போடும் சூழ்நிலை இருக்கும் பட்சத்தில் பத்து லட்ச ரூபாய் யாரும் தரமாட்டார்கள் என்றால் சரியல்ல. முதலில் ஒரு பத்து லட்ச ரூபாய் சிசிபி மூலமாக எதிரி கொடுத்து பின்னர் 09-11-2018-அன்று காசோலைகளை வசூலுக்கு செலுத்துமாறு எதிரி கூறினார். எதிரி மேற்படி 10 லட்ச ரூபாயை எனக்க கொடுத்த தேதி 25-12-2018-ஆகும். 25-12-2018 அன்று எதிரியிடம் பெறப்பட்ட ரூபாய் 10,91,450/-க்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று நான் என் வழக்கில் கூறியிருப்பது பொய் என்றால் சரியல்ல. வழக்கு காசோலைகளை பலவந்தமாக நான் பெற்றதால்தான் எதிரி ஸ்டாப் பேமெண்ட் குறிப்பை வங்கிக்கு கொடுத்தார் என்றால் சரியல்ல. ஸ்டாப் பேமெண்ட் என்று எதிரி கூறியுள்ளது தெரிந்திருந்தும் எவ்வித அனுமதியும் இன்றி காசோலையை வசூலுக்கு செலுத்தியது தவறு என்றால் சரியல்ல. எதிரி அவ்வாறு குறிப்பை கொடுத்தது எனக்கு தெரியாது. நான் போலி ஆவணங்களை தயார் செய்வதில் வல்லவன் என்றால் சரியல்ல. மாங்காய் தொடர்பான விபரங்கள், வரவுசெலவுகள், கொடுக்காமலும், principal என்ற முறையில் 3 ம் நபரான உறசியுல்லா மீது எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையிலும், ஏற்கெனவே சிசிபி போலிஸ் மூலமாக வழக்கு காசோலைகளுக்கு சம்மந்தமாக பத்து லட்ச ரூபாயை பெற்று முழுமையாக செட்டில்மெண்ட் செய்து கொண்ட படியாலும், இரண்டாம் முறை அதே வழக்கு மூலத்தை வைத்து வேறு நபர்களுக்கு வரவேண்டிய பணத்தை எந்த வித அனுமதியும் இன்றி என் பெயரில் காசோலை வழக்கு தாக்கல் செய்து கேட்டிருப்பதும், எதிரி சட்டப்படியான கடனுக்கு கொடுக்க தேவையில்லாத காசோலைகளை பலவந்தமாக மனரீதியாக அழுத்தம் கொடுத்து போலிசார் மூலம் பெற்றதோடு இவ்வழக்கை தவறான முறையில் தாக்கல்

எஸ்.டி.சி. எண். 07 /2020

PW1-முருகேசன்       த/பெ. கோவிந்தன்
தேதி- 11.02.2021
பக்க எண்- 3
எதிரி  தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

செய்துள்ளேன் என்றால் சரியல்ல.  வேறு நபர்களை பற்றி என் வழக்கில் குறிப்பிட்டுள்ள விபரங்கள், வரவு செலவுகள் பொய்யானவை என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை இத்துடன் முடித்துக்கொள்ளப்படுகிறது. )

(மறு விசாரணை இல்லை)

ஒம்/ எம்.ஏ.சுவேதாரண்யன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
ஓமலூர்.